# இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்திய தாக்கம்

**AAM. Nufile**

**அறிமுகம்:**

**ஆய்வுப் பின்னணி:**

தென்னாசிய நாடுகளிடையே வர்த்தக ஒருங்கிணைவானது குறைவான அளவு மட்டத்திலேயே விருத்தியடைந்துள்ளது. SAPTA, SAFTA ஆகியவற்றின் உருவாக்கத்தையடுத்து 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் உட் - பிராந்திய வர்த்தகம் பற்றிய கருத்துருவாக்கம் பரவலாக்கப்பட்டலும் கூட பிராந்திய நாடுகளிடையே வர்த்தகம் இன்னும் குறிப்பிடத்தக்க அளவுமட்டத்தை அடையவில்லை. பிராந்தியத்தின் பெரிய நாடான இந்தியாவின் வர்த்தக ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில் ஏனைய உறுப்பு நாடுகளின் கொள்கை வகுப்பாளர்களிடையே இந்தியாவுடன் வர்த்தக உறவைப் பேணுவது தொடர்பிலும், இருபக்க சுதந்திர வர்த்தகம் பற்றிய படிமுறைக் கட்டங்களை விரைந்து ஏற்படுத்திக் கொள்ளவும் ஆர்வம் அதிகரித்துள்ளது.

இலங்கை - இந்திய வர்த்தக உறவுகளை எடுத்து நோக்கின் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்தியாவுக்கே அது சாதகமாக இருந்துவரும் பினனணியில், இலங்கையின் கொள்கை வகுப்பாளர்களின் நோக்கம் எவ்வாறு இலங்கையின் இருபக்க வர்த்தகப் பற்றாக் குறையை குறைத்து சாதக நிலையை ஏற்படுத்த முடியும் எனும் வகையில் அமைய முற்பட்டடிருந்தது. சார்க் நாடுகளில் இலங்கைதான் முதல் முதலில் வர்த்தகத்தை தாராளமயப்படுத்தியிருக்கையில் இந்தியா இன்னும் பல்வேறுபட்ட வர்த்தகக் கட்டுப்பாடுகளை பேணிவருமிடத்து, பாக்கிஸ்தானுடனான அதன் உறவுகளிலுள்ள குழப்பநிலை காரணமாக SAPTA, SAFTA என்பவற்றின் செயல்திறன் எதிர்பார்த்தளவுக்கு இல்லாமையும், SAPTA, SAFTA ஆகியவற்றுக்கு அப்பால் இலங்கை தனது ஏற்றுமதிகளின் பன்முகத் தன்மையை அதிகரித்துக் கொள்வதற்காக இந்தியவுடன் மாத்திரமன்றி பாக்கிஸ்தானுடம் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதனையே கலேகம (2001) பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "ஆசியாவின் பொருளாதார வல்லரசுடன் வர்த்தக சமநிலையை அதிகரித்துக் கொள்ளும் நோக்கத்தையும், குறைசேர்மானப் பெறுமதிப் பண்டங்களிலிருந்து (Low Value-added goods) உயர் சேர்மானப் பெறுமதிப் பண்டங்களை (High Value-added goods) நோக்கியதாக இலங்கையின் வர்த்தக உருமாற்றத்தைத் தூண்டுவதும், குறைந்த வருமான மட்டத்தைக் கொண்ட நுகர்வோர்களுக்காக விலை குறைந்த இறக்குமதிகளை இந்தியாவிலிருந்து வரவழைப்பதும் இலங்கியன் இலக்காக உள்ளது".

இவ்வாறான பின்னணியில், இவ்வாய்வின் பிரதான நோக்கம் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்துக்கு இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஆற்றிவரும் பங்களிப்பை அளவுசார்ரீதியாக மதிப்பீடு செய்வதாகும்.

**ஆய்வின் நோக்கம்:**

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் எற்படுத்திய தாக்கத்தை அளவுசார்ரீதியான பகுப்பாய்வைக் கொண்டு மதிப்பீடு செய்யும் வகையில் அமைந்துள்ள இவ் ஆய்வு, இலங்கை - இந்திய வர்த்தகத்தின் வளர்ச்சியை ஒப்பீட்டாய்வுக்கு உட்படுத்தும் நோக்கத்தையும் கொண்டுள்ளது. இவ்விரு பிரதான நோக்கங்கள் பின்வரும் துணை நோக்கங்களால் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- வேறுபட்ட அளவுமட்டங்களில் இந்தியாவுடனான இலங்கையின் வர்த்தகத்தை ஆய்வு செய்தல்.
- முக்கியமான பேரினப் பொருளாதார மாறிகளில் வர்த்தகத் தாராளமயப்படுத்தலின் விளைவை

மதிப்பீடு செய்தல்.

- இலங்கை - இந்திய வர்த்தகக் கட்டமைப்பிலும், இருபக்க வர்த்தகத்திலும் வர்த்தகத் தாராளமயப்படுத்தல் ஏற்படுத்திய தாக்கத்தை பரிசோதித்தல்.
- சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தினால் வர்ததக விரிவாக்கம், வர்த்தகத் திரும்பல் விளைவுகள் ஏதாவது ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிதல்.
- இந்தியாவுடனான இலங்கையின் வர்த்தக உறவை மேலும் பலப்படுத்த கொள்கைரீதியான ஆலோசனைகளை வழங்குதல்.

ஆய்வு முறையியல்:

ஆய்வுத் தரவுகள் 1980 ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையாகவுள்ள 27 வருட காலத்துக்கு உரியதாகும். இவ் ஆய்வில் இலங்கையின் மொத்த வர்த்தகம் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி), உட் - பிராந்திய வர்த்தகம் (Intra-regional Trade), மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP), தலா வருமானம் (PCI), மொத்த வர்த்தகம் /மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதாசாரம் (TRADE / GDP), மற்றும் நாணயமாற்று வீதம் (ER) ஆகிய தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் பின்வரும் மாதிரியுரு இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தின் விளைவை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கு:

TRADEijt என்பது நாடு i இற்கும் நாடு j இற்கும் t எனும் காலத்தினுள் இடம் பெற்ற இருபக்க வர்த்தகமாகும் (ஏற்றுமதி + இறக்குமதி). அது மில்லியன் அமெரிக்க டொலரில் தரப்பட்டுள்ளது.

PCIit * PCIjt என்பது நாடு i இனதும் நாடு j இனதும் t எனும் காலத்திலுள்ள தலா வருமானம் (நடைமுறை விலைகளிலமைந்த மில்லியன் அமெரிக்க டொலர்).

TRADEit / GDPit என்பது t எனும் காலத்தில் நாடு i இனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மொத்த வர்த்தகத்தின் விகிதாசாரம் (Trade to GDP ratios, the so-called - openness ratio).

TRADEijt / GDPit என்பது t எனும் காலத்தில் இலங்கை மற்றும் நாடு j ஆகியவற்றுக்கிடையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருபக்க வர்த்தகத்தின் விகிதாசாரம் (Bilateral-trade to GDP ratio, openness ratio).

ERijt என்பது நாடு i இனதும் நாடு j இனதும் நாணயங்களின் நாணய மாற்றுவீதம். இது அந்நாடுகளின் சொந்த நாணயங்களுக்கு எதிரான மற்றய நாட்டு நாணயத்தின் பெறுமதி ஆகும்.

,1, 2 , 3, 4 ஆகியன மதிப்பிடப்பட வேண்டிய பிரமாணங்கள்.

என்பது வழு உறுப்பாகும்.

இங்கு TRADEijt மற்றும் PCI it * PCI jt ஆகிய இரு சாரா மாறிகளும் (Independent Variables) பெரியதும் செல்வமிக்கதுமான நாட்டின் வர்த்தகமானது சிறியதும் வறியதுமான நாட்டைவிடவும் அதிகமாக இருக்கும் என்பதனை விளக்குகின்றன. TRADEit / GDPit, TRADEijt / GDPit ஆகிய மூன்றாவது மாறியும் நான்காவது மாறியும் இவ் இரு நாடுகளிடையே இருந்துவரும் வர்த்தகத்தின் பருமனையும் அதன் அளவையும் விளக்குகின்றன. ERijt எனும் ஐந்தாவது மாறி இவ் இரு நாடுகளின் நாணயங்களின் விலையையும் கொள்வனவுச் சக்தியை அல்லது கொள்வனவு ஆற்றலையும்

எடுத்துக் காட்டுகிறது.

**இலங்கை - இந்திய வர்த்தகம்**

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான வர்த்தகத்தினை அதிகரிக்கும் முயற்சியாக 1961ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதுவே இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான முதல் நடவடிக்கையாக இருந்தது. ஆனாலும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் எதிர்பார்த்த பலாபலன்கள் கிட்டவில்லை. 1980களின் பிற்பகுதியிலிருந்துதான் இந்தியா - இலங்கை வர்த்தக உறவானது புதிய பரிமானத்தை வெளிப்படுத்தி வருகிறது.

ஒப்பீட்டு ரீதியில் இலங்கை-இந்திய வர்த்தகம் அதிகளவு இடம் பெற்றமைக்கு சார்க், சப்ரா மற்றும் இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஆகியன காரணமாக உள்ளன. ஆய்வுக் காலமான 1980 முதல் 2007 வரையாக உள்ள 27 வருடகாலத்திலும் இவ் இரு நாடுகளினதும் வர்தகத்தில் இந்தியாவே சாதக நிலையை வெளிப்படுத்தியுள்ளது. அட்டவணை இல: 01இன் பிரகாரம் இதனை மேலும் தெளிவாக விளக்க முடியும். அதன்படி, 1980ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டுவரையாகவுள்ள எல்லா ஆண்டுகளிலுமே வர்த்தக நிலுவை இலங்கைக்கு பாதகமாகவே அமைந்துள்ளது.

இலங்கையின் இந்தியாவுக்கான ஏற்றுமதிகளின் வளர்ச்சி நிலையானது 1980 முதல் 1990 வரையாகவுள்ள பத்து ஆண்டுகளில் சராசரியாக -4.17 சதவீதமாக இருந்தபோதும், 1990 முதல் 2000 வரையாகவுள்ள பத்து ஆண்டுகளில் சராசரியாக 19.02 சதவீதமான வளர்ச்சி காணப்பட்டது. ஆனால், 1980 முதல் 2007 வரையகவுள்ள 27 ஆண்டுகளில் 45.2 சதவீதமான சராசரி வளர்ச்சியை காட்டி நிற்கிறது. சார்க் தோற்றத்தின் பின்னரான (1985-2007) 22 வருடங்களிலும் சராசரி ஏற்றுமதி வளர்ச்சி வீதம் 372.3 ஆகவும், சப்ராவின் பின்னரான (1995-2007) 12 வருடகாலத்தில் ஏற்றுமதிகளின் சராசரி வளர்ச்சி வீதம் 125.8 என்ற சாதகமான நிலையையும் வெளிப்படுத்தியுள்ளது. இதுவே சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையடுத்து (1998-2007) வந்த 10 வருடகாலத்தில் ஏற்றுமதிகளின் சராசரி வளர்ச்சி வீதம் 126.9 என்ற நிலையையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தியாவிலிருந்தான இலங்கையின் இறக்குமதிகளின் வளர்ச்சி நிலையை அடுத்து நோக்கினால், 1980 முதல் 2007 வரையாகவுள்ள 27 வருடகாலத்திலும் சராசரியாக 96.3 சதவீதம் எனும் மட்டத்தில் இருந்துள்ளது. இது இலங்கையின் ஏற்றுமதி வளர்ச்சியுடன் (45.2%) ஒப்பிடுகையில் இரண்டு மடங்கு அதிகமாகும். 1980 முதல் 1990 வரையான தசாப்த காலத்தில் சராசரியாக 0.22 சதவீத்தால் இலங்கையின் இறக்குமதிகள் உயர்ச்சியடைந்து வந்துள்ளன. 1990 முதல் 2000 வரையான இரண்டாம் தசாப்த காலத்தில் 4.09 சதவீத்தால் இலங்கையின் இறக்குமதிகள் அதிகரித்து வந்துள்ளன. ஆனாலும், சார்க் இவ் நிலைமையை பாரியளவில் மாற்றியமைத்துள்ளது எனலாம். அதாவது, 1985 முதல் 2007 வரையாகவுள்ள 22 வருடங்களிலும் சராசரி இறக்குமதிகளின் வளர்ச்சி வீதம் 154.2 ஆக அமைந்திருந்தது. ஆனாலும், சப்ராவின் பின்னரான (1995-2007) 12 வருடகாலத்தில் 38% ஆன சராசரி இறக்குமதி வளர்ச்சியே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவே சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தையடுத்து (1998-2007) வந்த 10 வருடகாலத்தில் இறக்குமதிகளின் சராசரி வளர்ச்சி வீதம் 38.4 என்ற நிலையையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஒட்டு மொத்தமாக 1980 முதல் 2007 வரையாகவுள்ள 27 வருட காலத்தில் இலங்கையின் இந்தியாவுடனான வர்த்தகமானது, இலங்கையின் உலக வர்த்தகத்தில் கணிசமான பங்கை (4.03 சதவீதம்) கொண்டுள்ளது. இதில் குறிப்பிடக்க அம்சம் யாதெனில், சப்ராவின் பின்னர் சராசரியாக 4.3 சதவீதமாக அமைந்துள்ளமையாகும். 2000ஆம் ஆண்டில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபின்னர் இலங்கை-இந்திய வர்த்தக உறவு (2.2%) இன்னும் பலமடைந்துள்ளது.

**இலங்கை - இந்திய சுதந்திர உடன்படிக்கை:**

பொருளாதார ஒருங்கிணைவு ஊடாக உள்நாட்டுச் சந்தைகளை வெல்வது பொருளாதார அபிவிருத்திச் செய்முறைகளை துரிதப்படுத்துவதற்கான ஒரு முன் நிபந்தனையாகும். பிராந்தியங்களுக்கு இடையிலான பொருளாதார ஒத்துழைப்பையும் தேசிய பொருளாதாரங்களின் அபிவிருத்தியையும் பயன்படுத்தும் பொருட்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை இஸ்தாபித்து மேம்படுத்துவது அவசியம் என்பதை உணர்ந்துகொண்ட இந்தியாவும் இலங்கையும் 1998 டிசம்பர் 28இல் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டன. இந்த உடன்படிக்கை, தீர்வைகளைப் படிப்படியாகக் குறைப்பதற்கும் இரு தரப்பினருக்கும் இடையிலான வர்த்தகம் எதிர் கொள்ளும் தடைகளை ஒழிப்பதற்குமான ஏற்பாடுகளையும் உள்ளடக்கியிருக்கின்றது.

இந்திய - இலங்கை சுதந்திர உடன்படிக்கையின் ஓர் உள்ளார்ந்த பாகமான 'பொருள் பட்டியல்' முடிவாக்கப்பட்ட பின்னர் இது அமுலுக்கு வரும் என தலைவர்களால் கைச்சாத்திடப்பட்டபோது எதிர்பார்க்கப்பட்டது. அதன் மூலம் இந்தியச் சந்தைக்கு இலங்கையின் பண்டங்கள் அனுமதிப் பத்திரமின்றிச் உட்செல்லலாம் எனக் கூறப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இலங்கை - இந்திய வர்த்தக ஒப்பந்தத்துக்குரிய உள்ளடக்கங்களும், வரி நீக்கம் மூலம் சுதந்திர வர்த்தகத்தை உருவாக்குதல் என்ற எண்ணக்கருவும் முன்வைக்கப்பட்டன. இதில் இந்தியாவின் கடப்பாடுகள், இலங்கையின் கடப்பாடுகள் என இரு பிரிவுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவையாவன,

**இந்தியாவின் கடப்பாடுகள்**

1) இலங்கையின் ஏற்றுமதிகள் 1000 பொருட்களுக்கு உடனடியாக சுங்கத்தீர்வை விலக்கு அளிக்கப்பட்டது.
2) 4100 பொருட்கள் தொடர்பாக இலங்கைக்கு 50% தீர்வைச் சலுகையும், மூன்று வருடங்களில் முழுமையான சுங்கத்தீர்வை விலக்கும் அளித்தல். ஆயினும், புடைவை வகைகளுக்குத் தொடர்ந்து 25% தீர்வைச்சலுகை.

**இலங்கையின் கடப்பாடுகள்**

1) இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் 300 பொருட்களுக்கு உடனடியாக ஏற்றுமதித் தீர்வைச் சலுகை.
2) 600 பொருட்கள் தொடர்பாக இந்தியாவுக்கு 50% தீர்வைச்சலுகையும், மூன்று வருடங்களில் முழுமையான சுங்கத்தீர்வை விலக்கும் அளித்தல்.
3) இலங்கையின் பாதகமான பட்டியனுள் (Negative list) வராத மிகுதிப் பொருட்களுக்கு பின்வருமாறு எட்டு வருடங்களில் கட்டம் கட்டமாகத் தீர்வை விலக்களித்தல்.
   (i) எட்டு வருடங்களில் முதல் மூன்று வருடங்களின் இறுதியில் தற்போதுள்ள 35% தீர்வை விலக்கு.
   (ii) ஆறாவது ஆண்டு இறுதியில் தற்போதுள்ள 70% தீர்வை விலக்கு.
   (iii) எட்டாவது ஆண்டு இறுதியில் 100% தீர்வை விலக்கு.

**உள்ளூர் உற்பத்திகளைப் பாதுகாப்பதற்கான எதிர்மறைப் பட்டியல்**

- 60 நாட்களுக்குள் தீர்மானிக்கப்பட வேண்டிய இலங்கையின் பாதகமான பட்டியலில் விவசாய உற்பத்திகள், மீன்பிடித்துறை, தேர்ந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் உற்பத்திகள் அடங்கும்.
- இந்தியாவின் சர்வதேச இறக்குமதிகளான 0.74% அளவுக்கு (ஐக்கிய அமெரிக்க டொலரில் 40 மில்லியன் அளவான) இந்தியாவின் பாதகமான பட்டியல் அமைந்திருக்கும். தேயிலை, இறப்பர், பீங்கான் பொருட்கள் இப்பட்டியலில் உள்ளடக்கப்பட்டது.

- ❖ ஏனைய பொருட்கள் பூரண தீர்வை விலக்கு அல்லது 50% தீர்வைச் சலுகை அல்லது மூன்று வருடங்களில் பூரண தீர்வை விலக்கு அடையும்வரை தொடரும்.
- ❖ இந்தியச் சந்தைக்குரிய இலங்கையின் முன்னுரிமைக்குரிய 182 பொருட்களில் 175 பொருட்கள் மூன்று வருடங்களில் தீர்வை விலக்குப் பெறும்.
- ❖ மூன்று வருட இறுதியில், பெறுமதியின்படி 99% இற்கு மேற்பட்ட (U.S. டொலர் 40 மில்) இந்திய இறக்குமதிச் சந்தையில் இலங்கை தீர்வைச் சலுகையைப் பெறும்.

பெட்டி இல:01

**சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்படி அடிப்படை குறைப்புச் செய்யப்பட்ட சுங்கத் தீர்வை விலக்குதல்**
[தீர்வை வரிசை இல. (6 - digit H.S. 1996 குறியீடு]

| விபரம் | இலங்கையின் பொறுப்பு கடப்பாடு | இந்தியாவின் பொறுப்பு கடப்பாடு |
|---|---|---|
| எதிர்மறைப் பட்டியலில் இல்லாதவை (உண்மையான) | 1,180 | 196 |
| 50% (நிலையானது) ஆடைகள் கோட்டா | --- | 233 |
| 100% (பூச்சியத் தீர்வை) | 319 | 1,351 |
| 50% (3 வருடங்களில் 100%) | 889 | 2,799 |
| 50% (நிலையானது) தேயிலைக் கோட்டா | --- | 05 |
| 25% (நிலையானது) புடைவை வகைகள் | --- | 528 |
| 100% வரை 8 வருடங்களின் முடிவில் | 2,724 | --- |
| மொத்த வர்த்தகப் பொருட்கள் | 5,112 | 5,112 |

மூலம் : மூல ஒப்பந்தத்தின் இணைப்பு "A" மற்றும் "B"

எவ்வாறு இருந்தபோதும், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் முடிவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் அமுல் செய்ய முடியவில்லை. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 60 நாட்களுக்குள் அதன் உள்ளார்ந்த பாகங்களாக அமைய வேண்டிய பட்டியல்களைப் பரிமாறிக்கொள்வதில் ஏற்பட்ட தாமதமே இதற்கான காரணம் என அப்போது கூறப்பட்டது. குறிப்பாக இந்தியாவின் எதிர்மறைப்பட்டியல் இலங்கை நேரடி அக்கறை கொண்டிருந்த ஒரு சில பண்டங்களையும் உள்ளடக்கியிருந்தது (தேயிலை, இறப்பர்). இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு என 1999 *மார்ச்* மற்றும் ஜூன் மாதங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் மேலதிகப் பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றிருந்தன.

அட்டவணை இல: 01

**பேரின மட்டத்திலான இந்திய - இலங்கை இருபக்க வர்த்தக நிலை (1980 - 2007)**

மில். அமெ. டொலர்களில்

| ஆண்டு | ஏற்றுமதிகள் (இலங்கையில் இருந்து) | இறக்குமதிகள் (இந்தியவில் இருந்து) | வர்த்தக நிலுவை | இலங்கையின் மொத்த வர்த்தகம் | இலங்கையின் மொத்த வர்த்தகத்தின் %ஆக இருபக்க வர்த்தகம் |
|---|---|---|---|---|---|
| 1980 | 34.3 | 96.7 | -62.4 | 3067.8 | 4.27 |
| 1981 | 30 | 76.7 | -46.7 | 2929.5 | 3.64 |
| 1982 | 21.2 | 72.9 | -51.7 | 2769.4 | 3.40 |
| 1983 | 27.7 | 115.4 | -87.7 | 2848.6 | 5.02 |
| 1984 | 12.5 | 111.5 | -99 | 3281.2 | 3.78 |
| 1985 | 6.2 | 74.7 | -68.5 | 3096.7 | 2.61 |
| 1986 | 11.8 | 79.2 | -67.4 | 2992.1 | 3.04 |
| 1987 | 6.2 | 83.5 | -77.3 | 3390.7 | 2.65 |
| 1988 | 19 | 91 | -72 | 3740 | 2.94 |
| 1989 | 10 | 66 | -56 | 3627 | 2.10 |
| 1990 | 20 | 118 | -98 | 4530 | 3.05 |
| 1991 | 13 | 220 | -207 | 5048 | 4.62 |
| 1992 | 12 | 307 | -295 | 5961 | 5.35 |
| 1993 | 20 | 343 | -323 | 6864 | 5.29 |
| 1994 | 24 | 404 | -380 | 7431 | 5.76 |
| 1995 | 32 | 469 | -437 | 8282 | 6.05 |
| 1996 | 43 | 562 | -519 | 8829 | 6.85 |
| 1997 | 44 | 560 | -516 | 9911 | 6.09 |
| 1998 | 37.63 | 539.33 | -501.7 | 11083.3 | 5.21 |
| 1999 | 48.62 | 511.6 | -462.98 | 10877 | 5.15 |
| 2000 | 58.03 | 600.14 | -542.11 | 12146.8 | 5.42 |
| 2001 | 71.99 | 601.48 | -529.49 | 10453.2 | 6.44 |
| 2002 | 170.57 | 832.07 | -661.5 | 10702.7 | 9.37 |
| 2003 | 245.3 | 1073.2 | -827.9 | 1139175 | 0.12 |
| 2004 | 391.5 | 1439.1 | -1047.6 | 1395105 | 0.13 |
| 2005 | 566.4 | 1835.4 | -1263 | 1529635 | 0.16 |
| 2006 | 489.5 | 2172.9 | -1683.4 | 1783268 | 0.15 |
| 2007 | 515.3 | 2610.1 | -2094.8 | 2107943 | 0.15 |

மூலம்:
IMF: (1987-2003): Direction of Trade Statistics Year Book
Central Bank (2008): Annual Report 2008

## பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

**பொருத்தமான மாதிரியுருவைத் தெரிவு செய்தல்:**

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இருபக்க வர்த்தகத்தை நிர்ணயிக்கும் காரணிகளும் பொருத்தமான மாதிரியுருவை தெரிவு செய்தலும் எனும் அம்சத்தில், இவ் ஆய்வில் தலாவருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம் (TRADE to GDP ratios), மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உட்-பிராந்திய வர்த்தக விகிதாசாரம் (Inra-trade to GDP ratios), நாணயமாற்று வீதம் ஆகிய மாறிகள் முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட இம் மாறிகளுக்கும் இருபக்க வர்த்தகத்துக்கும் இடையே உள்ள தொடர்புகளைக்

கண்டு கொள்வதற்கு மடக்கை-மடக்கை, மடக்கை-நேர்கோடு, நேர்கோடு-மடக்கை, நேர்கோடு ஆகிய பன்மடங்கு பிற்செலவு மாதிரியுருக்களில் (Multiple Regression Models) மிகச் சிறந்த மாதிரியுருவைத் தெரிவு செய்வதற்கு பல்வேறு புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இலங்கை - இந்தியா இருபக்க வர்த்தகத்தில் மடக்கை-நேர் கோடு மாதிரியுரு போதுமானதாக உள்ளதால் ஆய்வுக்காக அது எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதன் பிரகாரம் இலங்கை-இந்தியா ஆகிய இரு நாடுகளையும் எடுத்துக் கொண்டால், அட்டவணை இல:02 ஆனது அந்நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக அடையாளம் காணப்பட்ட மாறிகளின் பெறுபேறுகளைக் காட்டுகிறது.

அட்டவணை இல:02

**பிற்செலவு ஆய்வினது பெறுபேறுகள் (1980 – 2007)**

(இலங்கை - இந்தியா வர்த்தகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்)

| மாறிகள் | பிற்செலவுக் குணகம் | t பெறுமானம் | நிகழ்தகவுப் பெறுமானம் |
|---|---|---|---|
| நிலையானது | 5.3786 | 18.49 | 0.000 |
| $(PCI_{it} . PCI_{jt})$ | 0.00000268 | 9.92 | 0.000 |
| $(TRADE_{it} / GDP_{it})$ | -0.0921 | -0.24 | 0.810 |
| $(TRADE_{ijt} / GDP_{it})$ | 32.841 | 11.25 | 0.000 |
| $(ER_{ijt})$ | -0.71753 | -8.75 | 0.000 |

கணிப்பிடப்பட்டவை

மேற்படி அட்டவணையின் படி 1980 முதல் 2007 வரையான ஆண்டுகளில் இலங்கை-இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான இருபக்க வர்த்தகத்தில் தலாவருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உட்-பிராந்திய வர்த்தக விகிதாசாரம், நாணயமாற்று வீதம் ஆகியவற்றால் விளக்கப்படுத்த முடியும் ($P = 0.01$). அதாவது, இலங்கை - இந்தியா வர்த்தகச் செய்முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம் தவிர்ந்த ஏனைய மாறிகள் அனைத்தும் 1% நம்பிக்கை மட்டத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனாலும், நாணயமாற்று வீதம் எதிர்க்கணியப் பெறுமதியை (-0.71753) கொண்டுள்ளதால் அதைத்தவிர மற்றைய மாறிகள் நேர்க்கணிய செல்வாக்கைச் செலுத்துகின்றன. இவை பற்றி நோக்குவோமாயின், முதலில் தலாவருமானம் 1 சதவீதத்தால் அதிகரிக்குமாயின் இலங்கை-இந்திய இரு பக்க வர்த்தகத்தில் ஏற்படும் சார்புரீதியான அதிகரிப்பு மாற்றம் 0.00000268 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஆனாலும், இவ் இரு நாடுகளிடையே தலாவருமானத்தில் பாரிய ஏற்றத்தாழ்வு காணப்படுவதை அறிய முடிகிறது. இலங்கையின் சனத்தொகை இந்தியாவுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறியதாக இருப்பதே இதற்கான காரணமாகும். அடுத்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உட்-பிராந்திய வர்த்தக விகிதாசாரம் ஆனது 1 சதவீத்தால் உயர்வடைந்த போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் 32.841 மில்லியன் அமெரிக்க டொலர்களால் சார்புரீதியில் உயர்வடைந்துள்ளது. அதாவது, பரஸ்பரம் வர்த்தகத் தடைகள் விலக்கப்பட்டால் எதிர்காலத்தில் உட்-பிராந்திய வர்த்தகம் இவ் இரு நாடுகளிடையே பாரியளவில் வளர்ச்சியடையும். இதற்கு மாறாக நாணயமாற்று வீதம் எதிர்க்கணிய செல்வாக்கை செலுத்தியுள்ளமையை இவ் ஆய்வு முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கை-இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான நாணயங்களின் பெறுமதி இந்தியாவுக்கே அதிக சாதகத்தைக் கொண்டுள்ளது. நாணயமாற்று வீதப் பெறுமதி 1 சதவீதத்தால் உயர்வடைந்த போது இருபக்க வர்த்தகம் 0.71753 மில்லியன் அமெரிக்கன் டொலர்களால் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆகவே, இவ் இரு நாடுகளின் நாணயங்களின் பெறுமதியில் மறுசீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளின் இருபக்க வர்த்தகத்தில் *சார்க்* அமைப்பு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என அறிந்து கொள்வதற்கு பின்வரும் ஈர்வை மாதிரியுருக்கள் பயன்படுத்தப்பட்டன. அவையாவன, மடக்கை-மடக்கை, மடக்கை-நேர்கோடு, நேர்கோடு-மடக்கை, நேர்கோடு ஆகியனவாகும். இப் பன்மடங்கு பிற்செலவு மாதிரியுருக்களில் (**Multiple Regression Models**) *மிகச் சிறந்த* மாதிரியுருவை தெரிவு செய்வதற்கு பல்வேறு புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை இல: 03 இன் பிரகாரம் 1985 முதல் 2007 வரையான ஆண்டுகளில் இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளின் இருபக்க வர்த்தகத்தில் ஏற்படும் மாறுபாடுகளை தலாவருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உட்பிராந்திய வர்த்தக விகிதாசாரம், நாணயமாற்று வீதம் ஆகியவற்றால் விளக்கப்படுத்த முடியும் ($P = 0.01$). அதாவது, இலங்கை - இந்தியா வர்த்தகச் செய்முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம் தவிர்ந்த ஏனைய மாறிகள் அனைத்தும் 1% நம்பிக்கை மட்டத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அத்துடன், நாணயமாற்று வீதமும் நேர்க்கணியப் பெறுமதியை (74.20) கொண்டுள்ளதால் சார்க்கின் பின்னர் அம்மாறி நேர்க்கணிய செல்வாக்கைச் செலுத்துகிறது இது சார்க்கினால் ஏற்பட்ட சாதகமாகும். இவை பற்றி நோக்குவோமாயின், முதலில் தலாவருமானம் 1 அமெரிக்க டொலரால் அதிகரிக்குமாயின் இலங்கை - இந்திய இரு பக்க வர்த்தகம் 0.0010269 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கும். இப்போது, சார்க்கின் பின்னர் தலாவருமான ஏற்றத் தாழ்வு கணிசமானளவில் குறைவடைந்துள்ளது. அடுத்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உட்பிராந்திய வர்த்தக விகிதாசாரம் ஆனது 1 அலகால் உயர்வடைந்த போது இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் 13840.8 மில்லியன் அமெரிக்கன் டொலர்களால் உயர்வடைந்துள்ளது. அதாவது, சார்க்கின் பின்னர் பரஸ்பரம் வர்த்தகம் மீதான தடைகள் 1 தடவை குறைக்கப்பட்டதால் இவ் இரு நாடுகளிடையேயான இருபக்க வர்த்தகம் 13808 மில்லியன் அமெரிக்கன் டொலர்களால் பாரியளவில் வளர்ச்சியடைந்துள்ளது. அதேபோன்றே, நாணயமாற்று வீதம் எதிர்க்கணிய செல்வாக்கை செலுத்தி வந்த நிலை சார்க்கின் பின்னர் மாற்றமடைந்து, அவ் இரு நாடுகளின் நாணயங்களின் பெறுமதி 1 அலகால் உயர்வடைந்த போது இருபக்க வர்த்தகம் 74.20 மில்லியன் அமெரிக்கன் டொலர்களால் உயர்வடைந்துள்ளது. ஆகவே, இவ் இரு நாடுகளின் நாணயங்களின் பெறுமதியில் சாதகமான மாற்றம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

அட்டவணை இல: 03

**பிற்செலவு ஆய்வினது பெறுபேறுகள் (1985 – 2007)**

***(இலங்கை - இந்தியா வர்த்தகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்)***

| மாறிகள் | பிற்செலவுக் குணகம் | t பெறுமானம் | நிகழ்தகவுப் பெறுமானம் |
|---|---|---|---|
| நிலையானது | -334.1 | -2.97 | 0.011 |
| ($PCI_{it}.PCI_{jt}$) | 0.0010269 | 9.50 | 0.000 |
| ($TRADE_{it}$ / $GDP_{it}$) | -1.60.2 | -1.04 | 0.319 |
| ($TRADE_{ijt}$ / $GDP_{it}$) | 13840.8 | 19.34 | 0.000 |
| ($ER_{ijt}$) | 74.20 | 3.20 | 0.007 |

கணிப்பிடப்பட்டவை

இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளின் இருபக்க வர்த்தகத்தில் சப்ரா அமைப்பு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னர் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதா என அறிந்து கொள்வதற்கு பின்வரும் ஈர்வை மாதிரியுருக்கள் பயன்படுத்தப்பட்டன. அவையாவன, மடக்கை - மடக்கை, மடக்கை - நேர்கோடு,

நேர்கோடு - மடக்கை, நேர்கோடு ஆகியனவாகும். இப் பன்மடங்கு பிற்செலவு மாதிரியுருக்களில் (Multiple Regression Models) மிகச் சிறந்த மாதிரியுருவை தெரிவு செய்வதற்கு பல்வேறு புள்ளிவிபரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை இல:04

**பிற்செலவு ஆய்வினது பெறுபேறுகள் (1995 - 2007)**

(இலங்கை-இந்தியா வர்த்தகத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்)

| மாறிகள் | பிற்செலவுக் குணகம் | t பெறுமானம் | நிகழ்தகவுப் பெறுமானம் |
|---|---|---|---|
| நிலையானது | -440.77 | -5.06 | 0.015 |
| $(PCI_{it} . PCI_{jt})$ | 0.0011415 | 6.85 | 0.006 |
| $(TRADE_{it} / GDP_{it})$ | 109.1 | 0.73 | 0.517 |
| $(TRADE_{ijt} / GDP_{it})$ | 16771.9 | 21.57 | 0.000 |
| $(ER_{ijt})$ | -66.58 | -1.72 | 0.185 |

கணிப்பிடப்பட்டவை

மேற்படி அட்டவணை இல: 04 இன் பிரகாரம் 1995 முதல் 2007 வரையான ஆண்டுகளில் இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளின் இருபக்க வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை தலாவருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருபக்க வர்த்தக விகிதாசாரம், நாணயமாற்று வீதம் ஆகியவற்றால் விளக்கப்படுத்த முடியும் ($P = 0.01$). அதாவது, இலங்கை - இந்தியா வர்த்தகச் செய்முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வர்த்தக விகிதாசாரம் மற்றும் நாணயமாற்று வீதம் தவிர்ந்த ஏனைய மாறிகள் அனைத்தும் 1%, 5% நம்பிக்கை மட்டத்தில் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவை பற்றி நோக்குவோமாயின், இரு நாடுகளினதும்தலாவருமானம் 1 அமெரிக்க டொலரால் அதிகரிக்குமாயின் இலங்கை-இந்திய வர்த்தகம் 0.0011415 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கும். இப்போது, சப்ராவின் பின்னர் தலாவருமான ஏற்றத் தாழ்வு மேலும் குறைவடைந்துள்ளது. அடுத்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருபக்க வர்த்தக விகிதாசாரத்தை எடுத்துக் கொண்டால் வர்த்தகத் தடைகளை மேலும் 1 தடவை விலக்கிக் கொள்ளப்பட்ட போது இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் 16771.9 மில்லியன் அமெரிக்கன் டொலர்களால் உயர்வடைந்துள்ளது. அதாவது, சப்ராவின் பின்னர் பரஸ்பரம் வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டதால் இவ் இரு நாடுகளிடையேயான இரபக்க வர்த்தகம் 2931.1 மில்லியன் அமெரிக்கன் டொலர்களால் பாரியளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இது 21 சதவீத வளர்ச்சியாகும்.

**ஆய்வு முடிவு**

ஆய்வு முடிவானது இலங்கையின் வர்த்தகத்தில் இருபக்க வர்த்தகம் கணிசமானளவு செல்வாக்கைக் கொண்டிருப்பதும், நாடுகளின் பொருளாதாரத்தின் பருமன், தலாவருமானம், திறந்த தன்மை (Openess), இருபக்க வர்த்தகம் அதன் திறந்த தன்மை, தலாவருமானத்தின் வேறுபாடு, நாணயமாற்று வீதம், என்பன நேர்க்கணிய செல்வாக்கை செலுத்தியிருப்பதை நிரூபிக்கிறது.

சார்க் அமைப்பின் உருவாக்கத்தின் பின்னர் இருபக்க வர்த்தகம் விரிவடைந்துள்ளதுடன் வர்த்தக-ஆக்கமும் கணிசமானளவில் ஏற்பட்டுள்ளது. சப்ராவின் பின்னர் அது மேலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டடுள்ளது. ஆயினும், பிராந்தியத்திற்கு வெளியேயான வர்த்தக-திரும்பல் விளைவுகள் பற்றிய சான்றாதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஒப்பந்தத்தின் பின்னர் வர்த்தக-திரும்பல் விளைவுகள் ஏற்பட்டதனால் தேறிய வர்த்தக நன்மை ஏற்பட்டுள்ளது.

இந்தியா வர்த்தக மேலாதிக்கத்தை வெளிப்படுத்தி வருவதுடன் பிராந்தியத்தினுள் முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகளை முன்னெடுப்பதால் இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங்கள் பாதிப்பு எதனையும் எதிர்நோக்கவில்லை என்பதும் எதிர்காலத்தில் சுதந்திர வர்த்தகம் பூரணமாக முன்னெடுக்கப்படுவது குறித்த அச்சம் தேவையற்றது என்பதையும் இவ் ஆய்வு முடிவுகளிலிருந்து தெரியவருகிறது.

தென்னாசியாவில் உட்-பிராந்திய வர்த்தகமானது பிராந்திய ஒருங்கிணைவை முன்னேற்றமடையச் செய்வதில் முக்கிய பங்கை வகித்துள்ளது. அதிலும் சப்ரா குறிப்பிடக் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை-இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இதனை உறுதி செய்கின்றது. ஆயினும், இவ் ஆய்வின் முடிவுகள் இரு நாடுகளும் தமது வர்த்தக-ஆக்க நன்மைகளை இன்னும் அதிகளவில் அடையவேண்டியுள்ளது எனக் காட்டுகின்றன. குறிப்பாக, இலங்கை கடந்த 30 ஆண்டுகளாக இந்தியாவுடன் போதிய வர்த்தக உறவை பேணி வந்திருப்பினும்கூட அந்நாட்டுடனான வர்த்தக விரிவாக்கத்தின் நன்மைகளைக் குறைவாகவே பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

எனவே, இந்த ஆய்வு முடிவானது, இலங்கையின் வர்த்தகம் குறைந்த மட்டத்திலேயே இருந்து வருகிறது எனும் கருதுகோளை ஏற்றுக் கொள்கிறது. அத்துடன் சார்க் நாடுகளின் உட்-பிராந்திய வர்த்தகத்தை விடவும் பிராந்தியத்திற்கு வெளியே இடம் பெறும் வர்த்தகம் அதிகமாகும். குறிப்பாக, இந்தியாவைத் தவிர ஏனைய உறுப்பு நாடுகள் தமது பொருட்களுக்கான சந்தையை பிராந்தியத்திற்கு வெளியேயே கணிசமாகக் கொண்டுள்ளன. உற்பத்தியில் பூரணத்துவம் இல்லாத நிலையில் இலங்கையின் வர்த்தக விரிவாக்கம் வரையறுத்தளவிலேயே இருந்து வரும் என்பதுடன் வளம் மற்றும் நிதி இடர்பாடுகளின் மத்தியில் வர்த்தக விரிவாக்கம் பொருளுள்ள வகையில் செல்வாக்கு எதனையும் கொண்டிருக்காது.

பிராந்தியத்திற்குள்ளான வர்த்தகமானது அரசியல் முரண்பாடுகள் தோற்றுவித்த கட்டமைப்புக்களின் இணக்கமின்மைகளால் தடுக்கப்பட்ட நிலையில் இருந்து வருவதையும் இந்த ஆய்வின் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இவ்வாறான தடைகள் ஒப்பந்த உடன்பாடுகளின் கீழ் விலக்கிக் கொள்ளப்பட்டதன்பேரில் இலாபத்துக்குரிய உட்-பிராந்திய வர்த்தகப் பாதைகள் சில திறந்துவிடப்பட்டுள்ளன. இதன் காரணமாக இலங்கையின் வர்த்தகம் இந்தியாவுடன் கணிசமானளவில் விரிவாக்கத்தைப் பெற்றுள்ளது.

இந்த ஆய்வின் முடிவு, இலங்கை ஒரு தலைப்பட்சமாக பொருளாதாரத்தை திறந்து விடுவதன் மூலம் வர்த்தக-ஆக்கத்தையோ அல்லது தேறிய வர்த்தக நன்மைகளையோ பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும், வர்த்தகத்தில் பரஸ்பரம் தீர்வை மற்றும் தீர்வையல்லாத் தடைகள் நீக்கப்படுவதன் மூலம்தான் வர்த்தகம் விரிவடைய முடியும் எனவும் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, இலங்கை தனது பொருளாதாரத் தாராளமயமாக்கலை 1970 களின் பிற்பகுதில் மேற்கொண்டதாயினும் கூட ஆய்வுக் காலம் முழுவதும் இந்தியாவுடனான அதன் வர்த்தகத்தில் அது எவ்வித செல்வாக்கையும் செலுத்தவில்லை. மாறாக சுதந்திர உடன்படிக்கையின் கீழ் பரஸ்பர வர்த்தகத் தாராளமயமாக்கல் இடம் பெற்றதையடுத்து இலங்கயின் வர்த்தகம் இந்தியாவுடன் விரிவடைந்துள்ளது. இது வர்த்தகம் பரஸ்பரம் விரிவடைய வேண்டுமாயின் ஏக காலத்தில் அனைத்து விதமான தடைகளும் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் பரஸ்பரமும் மேற்கொள்ளப்படுவதும் அவசியமாகும் எனும் வாதத்தை வலுப்படுத்துகிறது.

இவ் ஆய்வின் முடிவானது, இலங்கை எடுத்துக் கொள்ளப்பட்ட மாதிரி ஆண்டுகளில் ஒரு சில ஆண்டுகள் தவிர பெரும்பாலான வருடங்களில் வர்த்தக-ஆக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதுடன் ஒப்பந்தத்தின் பின்னர் அது இருமடங்காக அதிகரித்துள்ளதையும் வெளிப்படுத்தியுள்ளது. ஆனாலும், வர்த்தகத்-திரும்பல் விளைவிற்கான எவ்வித சான்றுகளும் கிடைக்கவில்லை. ஆயினும், இலங்கை இக்காலத்தில் இந்தியாவுக்கு அப்பால் தமது வர்த்தக உறவை அதிகளவில் பேணிவந்துள்ளதுடன் இந்தியவும் தமது வர்த்தகத்தில் ஏனைய நாடுகளில் தங்கியிருப்பதும் தெரியவந்தது. அதாவது, சமாந்தரமாக

பிராந்தியத்தினுள் வர்த்தகம் விரிவடைந்து வந்த அதேவேளை பிராந்தியத்துக்கு அப்பாலும் வர்த்தகம் விரிவடைந்துள்ளதை வெளிப்படுத்தியுள்ளது.

ஒப்பீட்டு ரீதியில் இலங்கை பிராந்தியத்தின் ஏனைய நாடுகளைப் பார்க்கிலும் தமது பொருளாதாரத்தை அதிகளவு விகிதாசாரத்தில் திறந்துள்ளதுடன் ஒருதலைப்பட்சமான இந் நடவடிக்கை பரஸ்பர தாராளமயமாக்கல் எடுத்துவந்த விளைவைவிடவும் குறைந்தளவான சாதகத்தையே இலங்கைக்கு கொண்டு வந்துள்ளமையை இவ் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கையின் வர்த்தகத்தில் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தைவிடவும் இறக்குமதிக் கொடுப்பனவு அதிகளவில் இருந்து வருவதும் முக்கிய அம்சமாக எடுத்துக் காட்டப்பட வேண்டும். குறிப்பாக இந்தியாவுடனான அதன் வர்த்தகத்தில் இலங்கையின் வர்த்தக மீதி பாதக நிலையையே வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையின் வரத்தகத்தின் முன்னேற்றத்தின் இந்த பலவீனம் ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியில் ஏற்பட்டுவந்த சரிவினாலும், உள்நாட்டுப் பணவீக்கத்தில் ஏற்பட்ட துரித அதிகரிப்பினாலும்தான் ஏற்பட்டது. ஆயினும், உடன்படிக்கையின் பின்னர் இதில் கணிசமான முன்னேற்றம் தென்படுவதால் எதிர்காலத்தில் இலங்கை அதிக அனுகூலங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

**கொள்நெறிப் பிரயோகம்**

இரு நாடுகளிடையே உள்ள வளங்களும் உற்பத்திப் பொருட்களும் ஒரே தன்மை வாய்ந்ததாக இருக்கின்றன. எனவே, இரு நாடுகளிடையேயான உள்ளார்ந்த கைத்தொழில் வர்த்தகமானது ஒப்பீட்டு நன்மை அடிப்படையில் பெரியளவில் செல்வாக்கைச் செலுத்தமாட்டாது. ஆயினும், நவீன வர்த்தகக் கோட்பாடுகள் நாடுகள் ஒரேவிதமான வளங்கள், உற்பத்திப் பொருட்கள் என்பவற்றைக் கொண்டிருப்பினும் கூட அவற்றுக்கிடையே வர்த்தகம் நடைபெறுமிடத்து பொருளாதாரச் சிக்கனங்களை அனுபவிக்க முடியும் என எடுத்துக் காட்டுகின்றன. எனவே, ஒப்பீட்டு நன்மை எதுவும் இல்லாத நிலையிலும் வர்த்தகப் பாய்ச்சலினூடாக பொருளாதாரச் சிக்கனங்கள் மற்றும் இலாபங்களை உழைத்துக் கொள்ள முடியும் என்பதனை இவ் ஆய்வு நிரூபிக்கின்றது.

ஒப்பந்தத்தின் கீழ் நடைபெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள தீர்வை விலக்குகள் இரு நாடுகளிடையேயான வர்த்தகத்தில் போதிய விரிவாக்கத்தை எடுத்துவரவில்லை. இரு நாடுகளின் பிரதான ஏற்றுமதிகள் இவ்வித வரிவிலக்களிப்புக்களின் கீழ் இதுவரை உள்ளடக்கப்படாமையே இதற்கான பிரதான காரணமாக இருக்கும்போது வர்த்தக விரிவாக்கத்துக்கு வரி விலக்களிப்புக்கள் பொருளுள்ள வகையில் செல்வாக்குச் செலுத்தமாட்டாது. எனவே, பரஸ்பர வர்த்தகத்துக்குரிய அனைத்துவகைப் பண்டங்களும் வரி விலக்களிப்பின் கீழ் முழுமையாக எடுத்துவரப்படுவதே இருபக்க வர்த்தகத்தை அர்த்தபுஷ்டியாக்கும்.

இந்தியாவிற்கான ஏற்றுமதிகளின் தேக்கமும் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளின் அதிகரிப்பும் இலங்கையின் இருபக்க வர்த்தகத்தில் பற்றாக் குறையை அதிகரித்துள்ளது. குறிப்பாக, இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கை, பிராந்தியத்திற்குத் தேவையான பொருட்களின் உற்பத்தியளவை விடவும் பிராந்தியத்திற்கு அப்பால் தேவைப்படும் பொருட்களையே அதிகளவில் உற்பத்தி செய்கிறது. இலங்கையில் குறைந்தளவான கைத்தொழில்மயமாக்கமும், உற்பத்தியில் போதியளவில் பல்லினத் தன்மை காணப்படாமையும், உறுப்பு நாடுகளின் வர்த்தகக் கொள்கைத் தடைகளும் பிராந்தியத்தினுள் குறைந்தளவான ஏற்றுமதிப் பெறுமானத்தை அது பெற்றுவரக் காரணமாக இருக்கிறது. எனவே, சப்ரா, சப்டா, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஆகியவற்றின் கீழ் வர்த்தகக் கொள்கைத் தடைகள் விரைவாக நீக்கப்படல் அவசியமாகிறது.

அத்துடன், பிராந்தியத்தினுள் வர்த்தகத் தாராளமயமாக்கல் போதியளவில் இடம் பெறுவதினூடாக குறைந்த போக்குவரத்துச் செலவின் மூலம் பொருட்களை விரைவாகப் பரிமாறிக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். மேலும், இறக்குமதிகளின் மீதான குறைந்த தடைகள் பொதுவான போட்டியை ஏற்படுத்தி உற்பத்தியாற்றலை நெருக்கமாக விரிவாக்கம் செய்யும். இலங்கையின் கைத்தொழில்துறை இந்தியா போன்ற அயல் நாடுகளுடன் போட்டியிடக் கூடிய வாய்ப்பை பெறுவதன் மூலம் தமது உற்பத்தி ஆற்றலை பெருக்கிக் கொள்ள முடிவதுடன் குறைந்த செலவுடன் தரத்தை முன்னேற்றிக் கொள்ளவும் முடியும். நடைமுறையில், உயர் தீர்வைத் தடைகளினூடாக திறமையற்ற நிறுவனங்களிடமிருந்து வளங்களை மீள் ஒதுக்கீடு செய்யும் முறைக்கு அப்பால், வர்த்தகத் தாராளமயமாக்கல் ஊடாக வள ஒதுக்கீட்டில் முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியும்.

சப்ரா, சப்டா, சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்பன இலங்கைக்கு ஏற்றுமதி வாய்ப்புக்களை அதிகளவில் எடுத்துவரக் கூடியதாக இருப்பதுடன், கைத்தொழிலின் இயலளவும் விருத்தியடையவும் முடியுமாதலால் இலங்கையின் ஏற்றுமதியில் அதிகரிப்பு ஏற்பட முடியும். மேலும், மூலப் பொருட்கள், இடைத்தர உள்ளீடுகள், இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றை இந்தியா, பாக்கிஸ்தான் போன்ற பிரதான நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் மலிவான வளநிரம்பலை பெற்றுக் கொள்ள முடிவதுடன் இலங்கை தமது தயாரிப்புத்துறை ஆற்றலை பொருளுள்ள வகையில் முன்னேற்றமடையச் செய்ய முடியும். இதன் மூலம், வரி விடுதலைகளினால் கிடைக்கக் கூடிய வருமான அதிகரிப்பு மாத்திரமன்றி உற்பத்திகளின் பெறுமானமும் அதிகரிக்கும். இது புதிய கைத்தொழில்களின் பெருக்கத்தைத் தூண்டவும் செய்யும்.

உடன்படிக்கையின் கீழ் தற்போது இருந்து வரும் எதிர்மறைப் பட்டியல் நிபந்தனை இந்தியாவுக்கே சாதகமாக இருந்து வருகிறது. எனவே, இவ் விதி எதிர்காலத்தில் தளர்த்தப்படல் அவசியம். இறக்குமதிக் கோட்டா, அனுமதிப்பத்திர நடைமுறை, இறக்குமதித் தடைகள், நாணயமாற்றுவீதக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்பத் தராதரம், சுகாதாரத் தேவைப்பாடுகள், அரச வர்த்தகத் தனியுரிமை, வேறுபாடான சுங்க பெயர் பட்டியலிடல் இன்னும் ஆவணங்களின் தேவைப்பாடுகள் போன்ற தீர்வையல்லாத் தடைகள் இவ்விரு நாடுகளில் இன்னும் அதிகளவில் இருந்து வருவதும் அவை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் இன்னும் எடுத்துவரப்படவும் இல்லை. இவை இருபக்க வர்த்தக விரிவாக்கத்திற்கு பாரிய தடைகளாக இருப்பதனால் இவற்றையும் தீர்வை விலக்களிப்புக்களுக்குச் சமமாக எடுத்துவருவதும் இருபக்க வர்த்தக வளர்ச்சிக்கு ஆரோக்கியமாக அமையும்.

வெற்றிகரமான வர்த்தகத் தாராளமயமாக்கலினூடாக பலமிக்க தனியார்துறையையும் இணைத்துக் கொண்டு கைத்தொழில்மயமாக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும். பலமிக்க தனியார்துறை, உற்பத்தியில் வினையாற்றலை பெருக்கிக் கொள்ள உதவுவதுடன் சிறப்பான வள ஒதுக்கீட்டையும் மேற்கொள்ள உதவுவதனால் உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி மிகையையும் ஏற்படுத்தும். அரசாங்கம் தனது வர்த்தக நிறுவனங்களினூடாக தனியுரிமைகளை உருவாக்க முயற்சிக்காமல் தனியார்தறையை ஊக்குவிப்பதன் மூலம் இதனை மேற்கொள்ள முடியும். இவ்வகையில், அண்மைக்காலப் போக்கை எடுத்து நோக்குகையில் இரு நாடுகளிலிலும் தனியார்துறை முன்னெடுப்புக்கள் சாதகமாக இருப்பது வரவேக்கத்தக்கதாகும்.

இரு நாடுகளுமே ஒரே வகை முதலீடுகளுக்காக தம்மிடையே கடுமையாகப் போட்டியிட்டுக் கொள்கின்றன. இந்தியாவைவிட இலங்கை ஊழியச் செறிவான உற்பத்தியையே அதிகளவில் மேற்கொண்டு வருகின்றது. எனவே, இப் பிராந்தியம் தொழில்நுட்ப அறிவுள்ள ஊழியத்தையும் மூலதனத்தையும் அதிகளவில் வேண்டி நிற்கிறது. புதிதாக கைத்தொழில்மயமாகிய நாடுகள் தமது அபிவிருத்தியின் ஆரம்பக் கட்டத்தில் முன்னேறிய நாடுகளிடமிருந்து தொழில்நுட்பத்தையும் மூலதனத்தையும் கூடியளவில் வரவழைத்துக் கொண்டு பின்னர் இரண்டாம், மூன்றாம் தலைமுறைத் தொழில்நுட்பங்களை தாமாகவே

உருவாக்கி முன்னேறியிருந்தன. எனவே, இலங்கையும் தமது மலிவான ஊழியத்தை தொழில்நுட்பரீதியில் மாற்றியமைத்துக் கொள்ள அதுபோன்றளவு தொழில்நுட்ப, மூலதனப் பாய்ச்சலையும் வேண்டி நிற்கிறது. இதற்கு இந்தியாவும் இலங்கைக்கு உதவவும் வேண்டும்.

இரு நாடுகளுமே தம்மிடையேயான நிதி ஒத்துழைப்புக்களை மேலும் அதிகரித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அவை, தாமாகவே தீர்வை ஒன்றிய ஏற்பாடுகள், ஏற்றுமதிக் கடன்கள் செலுத்தும் தீர்வகங்கள் போன்றவற்றை உருவாக்கிக் கொள்ளல் அவசியமாகும். இரு நாடுகளினதும் நாணயங்களிடையே உள்ளகப் பெறுமதியில் காணப்படும் பாரிய வேறுபாடுகளும், குறைந்தளவான நிதிப் பாய்ச்சல்களும் அந்நாடுகளை பிராந்தியத்திற்கு வெளியிலிருந்தான நிதிப் பாய்ச்சலை எதிர்பாக்கத் தூண்டியுள்ளன. அபிவிருத்தி உதவிகள் அல்லது ஏற்றுமதிக் கடன்கள் போன்ற வடிவில் அபிவிருத்தியடைந்த நாடுகள் இந்நாடுகளுக்கு உதவி வருகின்றன. எனவே, சார்க் உட்-பிராந்திய வர்த்தகச் செய்முறைகளிலும் இவ்வாறு பின்பற்றப்படுமாயின் பிராந்தியத்தினுள் அதிகளவு நிதிப் பாய்ச்சல்களை மேம்படுத்திக் கொள்ள முடியும். உறுப்பு நாடுகளிடையே நிதி உதவிகளை அதிகரித்துக் கொள்ள முடியுமாயின் அது உண்மையில் முக்கிய அடைவாகவே கொள்ளப்படும். உறுப்பு நாடுகளிடையே நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய சாதனங்களை (தீர்வை ஒன்றியம், ஏற்றுமதிக் கடன் ஒன்றியம், செலுத்தல் ஒன்றியம்) எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்களில் பாரிய தொடர்புகளும் வசதிகளும் ஏற்படும். · சில வேளைகளில், இவ்வாறான நிதி ஏற்பாடுகளுக்கு உறுப்பு நாடுகளின் நாணயங்களை வெளிநாட்டு நாணயங்களுக்கு மாற்றிக் கொள்ள முடியாத நிலை வரையறையாக அமையலாம். இச் சந்தர்ப்பத்தில் பிராந்தியத்துக்கென பொதுவான நாணயம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது மிகவும் உதவியாக அமையும்.

### தீர்வுகள்

தாராள வர்த்தகத்தின் கீழான இந்த ஆய்வின் சான்றானது, இருபக்க வர்தக நடைமுறைகள் பூரனவிலக்கு எனும் அடுத்த கட்டத்துக்கு (2009) மேலும் முன்னெடுக்கப்படுமாயின் இருபக்க வர்த்தகம் மேலும் பலமடங்கு பெருக்கம் அடையும் எனக் காட்டுகிறது. ஏனெனில், சுதந்திர வர்த்தகம் மற்றும் சுங்கக் கூட்டு ஆகியவற்றின் கீழ் தீர்வை மற்றும் தீர்வையற்ற தடைகள் மேலும் விலக்கிக் கொள்ளப்படுமாதலால் வர்த்தகம், முதலீடு என்பன விரிவாக்கத்தை அடையும்.

சுதந்திர வர்த்தக உடன்பாடானது நிதிவள இறக்குமதிக்கான வங்கிகள் வழங்கக் கூடிய வசதிகளை இலகுபடுத்துவதற்கும், நிலத்தால் கட்டுண்ட நாடுகள் மாற்றல் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும், முதலீட்டின் தடைகளை விலக்கிக் கொள்ளவும் வாய்பை எற்படுத்தித் தரும். அத்துடன், துணிகர முதலீடு, ஆரோக்கியமான போட்டிச் சூழல் போன்றவற்றுக்கான இலகு சட்டதிட்டங்களை ஏற்றுக் கொள்ளவும், தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து முறைமைகளின் அபிவிருத்தி, தாய்நாட்டுக்கு திரும்பிச் செல்லும் இலாபத்தின் மீதான இலகு நாணயமாற்று வீதக்கட்டுப்பாடு, வர்த்தக விசா நடைமுறைகளில் தளர்வு போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளால் இருபக்க வர்த்தகம் மேலும் விரிவடையும்.

நாடுகள் தமது நாணயத்தின் பெறுமதியில் இருந்துவரும் மிகை மதிப்பீட்டையும், உள்நாட்டுப் பணவீக்கத்தையும் குறைக்கக் கூடியதாக அவற்றின் நாணயக் கொள்கை புதிதாக வடிவமைக்கப்பட வேண்டும். அத்துடன் பரஸ்பரக் கேள்விக்குரிய பண்டங்களை உற்பத்தி செய்யும் வகையில் இலங்கையின் ஏற்றுமதிகளில் பல்லினத் தன்மை பேணப்படல் வேண்டும்.

இலங்கை போன்று இந்தியவும் தமது தாராளமயமாக்கலை மேலும் விரைவுபடுத்தும் வகையில் அது, தீர்வை, தீர்வையற்ற தடைகள் மற்றும் அமைப்புரீதியான தடைகளை ஒரு சீரான கால இடைவெளியில் விரைவாக விலக்கிக் கொள்வதும் வர்த்தக விரிவாக்கத்தை தூண்டும். இதற்கான புதிய பேச்சுவார்த்தைகள் பற்றிய கால அட்டவணை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

அவ்வாறே, உட்-பிராந்திய வர்த்தகத்தை தூண்டும் வகையில் சப்ராவின் கீழ் பரிபாலிக்கக் கூடிய தென்னாசிய முதலீட்டு நிதியம், தென்னாசிய முதலீட்டு அபிவிருத்தி வங்கி ஆகியவற்றை ஏற்படுத்தி உட்-பிராந்திய முதலீடுகளை வேகமாக முன்னெடுக்கலாம். அத்துடன் தென்னாசிய மத்திய வங்கி, தென்னாசியப் பொருளாதார சமூக ஆணைக்குழு போன்ற அமைப்புக்களை உருவாக்கி தென்னாசியாவுக்கென பொதுவான நாணயம் ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம் உட்-பிராந்திய வர்த்தகத்தை மேலும் பலப்படுத்தலாம்.

**References**


Athukorala, R.N.A (2008), "Has SL-India trade saturated?" The Daily News, 17/06/2008

Central Bank of Sri Lanka (1987-2007), *"Annual Report"*, Colombo: Central Bank of Sri Lanka.

Dharmapriya, D.G.A.P (2003), *"Assessment of the performance of the Indo-Sri Lanka free trade agreement"*, Economic Review, Vol: 29, No: 04/05, Pp: 25-28, 33, Colombo, People's Bank.

Dheerasinghe, R (2003), *"International Trade Present Status and Future Direction"*, Economic Review, Vol: 29, No: 04/05, Pp: 2-8, 14, Colombo, People's Bank.

Henegedara, M (2003), *"International Trade and Economic Growth"*, Economic Review, Vol: 29, No: 04/05, Pp: 15-19, 24, Colombo, People's Bank.

Independent Analyst (2008), *"Indo-Sri Lanka FTA myths and realities"*, The Sunday Times, 31/08/2008

Kelegama, S (1996), *"SAPTA and its Future"*, South Asian Survey, Vol: 3, No: 01/02, Pp: 172-190, New Delhi, SAGE Publication.

Perera, M.S.S (2008), "Impact of the Indo- Sri Lanka Free Trade Agreement on the Sri Lankan Economy: A Computable General Equilibrium Analysis", South Asia Economic Journal, Vo: 09, No: 01, Jan/June, pp: 1-50, New Delhi, SAGE Publication

http://unstats.un.org/unsd/snaama/selectionbasicFast.asp